This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# வைரங்கள்

www.writersujatha.com

பத்தென்பதாம் நூற்றாண்டு

அவன் கண்களைப் பிடுங்கினார்கள், சித்திரவதை செய்தார்கள். ஷாஷுஜா தன்னிடமிருந்த கோஹினூர் வைரத்தைக் கொடுக்க மறுத்தான்.

“பைத்தியக்காரனே! கேவலம் ஒரு கல்லுக்காக இத்தனை அல்லல் படுகிறாயே!”

கண்களில் ரத்தம் வழிய அந்த ஆப்கானி இளவரசன் பதில் சொன்னான், “அது அதிர்ஷ்ட வைரம்!”

இன்று......

## 1. ராலிமுக்கு

ராலிமுக்கு என்ற அந்த இடத்துக்கு எப்படிப் பெயர் வந்தது என்பது நம் சர்ச்சையில்லை. கோவை–பாலக்காடு பாதையில் தமிழ்நாடுப் பகுதியில் பிரதான சாலையிலிருந்து விலகும் மண் பாதையில் சரேல் என்று திருப்பத்தில் இருக்கிறது ராலிமுக்கு. அதைக் கிராமம் என்றோ டவுன் என்றோ சொல்ல முடியாது. ஓர் இடம்; அவ்வளவுதான். நெடுப்பாக்கம் பஞ்சாயத்து எல்லைக்கு உட்பட்டது. பஞ்சாயத்திலிருந்து புறம்போக்குப் பனை மரங்களில் பதனீர் இறக்கத் தினம் ஒரு பள்ளன் வருவான். பெரியசாமி கடையில் சின்னப் பழுப்புச் சீட்டைக் கிழித்துக் கொடுத்து வீட்டுக் காசு வாங்கத் தினம் ஓர் இளைஞன் வருவான். பஞ்சாயத்துச் சார்பில் ராலிமுக்குக் கிடைத்திருப்பது ஒரே ஒரு ட்யூப்லைட்டு. அதுகூட ராப்பூரா கக்கிக் கொண்டே இருக்கும் பக்பக் என்று.

ராலிமுக்கு ஏறக்குறைய மலையின் மடியில் இருக்கிறது. ஆலமரங்களின் நிழலடியில் ஒன்றிரண்டு ஓட்டு வீடுகள். நீலவானம் நடனமாடும் ஒரு சுனை. சுமை தாங்கிப் பாறை. சுற்றிலும் தரிசு நிலம். கொஞ்சம் கொஞ்சம் அங்கொன்றும் இங்கொன்றுமாக பச்சை சதுரங்கள். சற்று அஜாக்கிரதையாக இருந்தால் கவிதை எழுதத் தோன்றும். கொஞ்ச நேரம் பொறுமையாகக் காத்திருந்தால் உடல் முழுவதும் மயூர நீலமுடைய ‘மலபார் விசிலடிச்சான்’ என்னும் அக்காக் குருவியின் ஏற்ற இறக்கச் சீட்டிகளைக் கேட்கலாம்.

ராலிமுக்கிலிருந்து ஒன்றரை இரண்டு மைல் தொலைவில் க்வாரி இருக்கிறது. அங்குள்ள மெஷின்கள் கடித்துப் பொடி பண்ணும் கற்கள் நாகரிகத்தை நோக்கி லாரிப் பிரயாணம் போகும்போது டிரைவர்கள் இங்கே கொஞ்சம் நிறுத்திப் பெரியசாமி கடையில் டீத் தண்ணீர் சாப்பிட்டு விட்டுச் செல்வார்கள். ஏறக்குறைய எல்லோரும் நிற்பார்கள்.